தினமலர் 03-12-2024

# கைவிடப்பட்ட குவாரிகளை சீரமைக்க ஆய்வு செய்ய வழக்கு

## பதில் கோரும் உயர்நீதிமன்றம்

மதுரை, டிச.3–

தென் மாவட்டங்களில் கைவிடப்பட்ட கல்குவாரிகளை சீரமைக்க குழு அமைத்து, ஆய்வு செய்ய தாக்கலான வழக்கில் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்ய உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

**மதுரை சத்தியமூர்த்தி தாக்கல் செய்த பொதுநல மனு:**

தமிழகத்தில் கைவிடப்பட்ட கனிம குவாரிகளில் தேங்கும் மழை நீரில் மனிதர்கள், கால்நடைகள் மூழ்கி இறப்பது தொடர்கிறது. மதுரை ஒத்தக்கடையில் பயனற்ற கல்குவாரியில் மூழ்கி ஒருவர் பலியானார். பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கடமை.

குவாரி நடத்த உரிமம் பெறும் குத்தகைதாரர்களிடமிருந்து பசுமை நிதியை கனிமவள விதிகள்படி வசூலிக்க வேண்டும். அதை கைவிடப்பட்ட குவாரிகளை மறுசீரமைக்க பயன்படுத்த வேண்டும். குவாரி நடவடிக்கைகளுக்குப் பின் மறுசீரமைப்பு வழிகாட்டுதல்களை ஐ.நா.,வின் சுற்றுச்சூழல் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி குவாரிகளில் மழைநீர் உட்புகுதல் உட்பட பல்வேறு விளைவுகளை ஆய்வு செய்வது அரசின் கடமை.

விதிகள்படி மாவட்ட அளவில் கலெக்டர் தலைமையில் பல்வேறு துறை அதிகாரிகள் கொண்ட மறுசீரமைப்பு குழு அமைக்க வேண்டும். திருச்சி உள்ளிட்ட 23 மாவட்டங்களில் தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் விபரம் கோரினோம். இவற்றில் 6 மாவட்டங்களில் மட்டுமே கைவிடப்பட்ட குவாரிகளில் மறுசீரமைப்பு மேற்கொள்ள குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. 17 மாவட்டங்களில் அவ்வாறு செய்யவில்லை.

கிருஷ்ணகிரி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் பசுமை நிதி உருவாக்கப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட குவாரிகளை சுற்றிலும் வேலி அமைக்க வேண்டும். குவாரி குத்தகை உரிமம் பெற்றவர்கள் பசுமை நிதி செலுத்தியதை உறுதி செய்ய வேண்டும்.மதுரை உள்ளிட்ட தென்மாவட்டங்களில் கைவிடப்பட்ட குவாரிகளை மறுசீரமைக்க குழு அமைக்க வேண்டும்.



அக்குழு குவாரிகளை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பசுமை நிதி உருவாக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், ஏ.டி.மரியா கிளீட் அமர்வு தமிழக தொழில்துறை கூடுதல் தலைமைச் செயலர், கனிமவளத்துறை கமிஷனர் ஜன.,29 ல் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டது.